கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

வாக்குமூல படிவம்

**E.A.No.4/2025 in E.P.No.28/2016**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.பத்மாவதி | ம.சா | : 1 |
| த/பெயர் | : சுப்ரமணி | தேதி | : 06.07.2026 |

மனுதாரர் தரப்பு சாட்சி 1ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.கோ.ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:-**

1. இவ்வழக்கு என்ன வழக்கு என்றால், விபத்து இழப்பீடு வழக்காகும். விபத்து வழக்கு என்னவானது என்றால், அது என்னவென்று எனக்கு தெரியாது காடு விற்றார்கள் அந்த காட்டினை நாங்கள் வாங்கினோம். இவ்வழக்கு குறித்த விபரம் எவ்வாறு எனக்கு தெரியவந்தது என்றால், ஜப்திக்கு வருவதாக கூறினார்கள் அதனால் எனக்கு வழக்கு குறித்த விபரம் தெரிய வந்தது. 24.06.2017ம் தேதியன்று சொத்து ஜப்தியான விபரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். அவ்வாறெனில் 2017 ஆம் வருடம் முதல் 2024 ஆம் வருடம் வரை ஏன் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், என்னுடைய குடும்ப சூழ்நிலையின் காரணமாக என்னால் நடவடிக்கை எதுவும் எடுக்க இயலவில்லை, அதனால் மனு எதுவும் தாக்கல் செய்ய இயலவில்லை. குடும்ப சூழ்நிலை எவ்வாறு இருந்தாலும் என் சொத்தை ஜப்தி செய்துள்ள நிலையில் அதற்கான நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும் என்றால், சரிதான்.

2. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரம்மாணவாக்குமூலம் தயார் செய்ய யார் வழக்கறிஞருக்கு விபரங்களை கூறினார்கள் என்றால், நான் தான் கூறினேன். நான் என் மனுவினை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால், தவமணி என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். திருப்பதி என்பவர் காட்டினை எனக்கு விற்றவர் ஆவார். திருப்பதி என்பவர் எனக்கு உறவினர் அல்ல, அவர் காட்டை விற்பதை கேள்விப்பட்டு தான் காட்டை வாங்கினோம். யார் மூலமாக திருப்பதி காடு விற்பது தெரியவந்தது என்றால், புரோக்கர் மூலமாக தெரிந்து கொண்டோம், புரோக்கரின் பெயர் தெரியாது.

3. மனு சொத்தினை என் கணவர் வாங்கினார் என்றால், சரிதான். மனு சொத்து வாங்குவதற்கு முன்னர் வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தோமா? என்றால், வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தோம் அதில் வில்லங்கம் எதுவும் இல்லை அதனால்

வாங்கினோம். நாங்கள் போட்டு பார்த்த வில்லங்க சான்றிதழை இம்மனுவில் தாக்கல் செய்துள்ளோமா? என்றால், தாக்கல் செய்துள்ளோம். மேற்படி வில்லங்கச் சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவன பட்டியலில் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்வதாக குறிப்பு இல்லை என்றால், சரிதான்.

4. திருப்பதிக்கு நானும், என்னுடைய கணவரும் வேண்டப்பட்டவர்கள் என்றாலும். அதனால் தான் திருப்பதிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்க வேண்டும் என்பதற்காக வில்லங்கச் சான்றிதழ் போட்டு பார்த்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நேரடியாக திருப்பதியிடமிருந்து காட்டை வாங்கினோம் என்றால், சரியல்ல. திருப்பதி ஒரு பொது அதிகார முகவரை நியமித்திருந்தார், அவர் மூலமாக காட்டினை என்னுடைய கணவர் பெயரில் வாங்கினோம். அந்த பொது அதிகார பத்திரத்தினையும் மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பொது அதிகார பத்திரத்தினை தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதாவது உள்ளதா? என்றால், காரணம் எதுவும் இல்லை.

5. உண்மையில் என்னுடைய கணவர் சரியான பிரதிபலனுக்காக மனுசொத்தினை கிரையம் பெற்றிருந்தால் உண்மையான கிரையதாரர் என்பதை நிரூபிப்பதற்கு பொது அதிகார பத்திரத்தினை மனுவில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், மேற்படி பொது அதிகார பத்திரத்தினை தாக்கல் செய்யாததிலிருந்து நான் திருப்பதிக்கு ஆதரவாக செயல்படுகிறேன் என்பது தெரிய வருகிறது என்றால், சரியல்ல. கடந்த 23.05.2007ம் தேதியன்று எனது கணவர் மனு சொத்தினை பொது அதிகார முகவரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றும், அன்றைய தினத்திலிருந்து மனுசொத்தில் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றாலும், என்னுடைய கணவர் எந்த காலத்திலும் மனு சொத்தில் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால், சரியல்ல.

6. நானும், என்னுடைய கணவரும் ஒன்றாக வசித்து வருகிறோம் என்றால், சரிதான். என்னுடைய கணவர் காட்டினை என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைக்க வேண்டிய அவசியம் என்னவென்றால், என்னுடைய கணவர் ரிக்வண்டி தொழில் செய்து அதில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது, மேற்படி கடனை திருப்பி

செலுத்துவதற்காக காட்டினை என்னுடைய கணவர் விற்பதாக கூறினார், அதற்காக என்னுடைய அம்மா நகைகளை விற்றும், மேற்கொண்டு பணம் போட்டு மேற்படி காட்டினை என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைக்குமாறு கூறியதால் என் பெயரில் தானசெட்டில்மெண்ட் செய்தார். நான் சாட்சியம் அளிப்பதில் இருந்தே என்னுடைய கணவருக்கு போதிய வசதி இல்லை என்பது தெரிய வருகிறது என்றாலும், திருப்பதிக்கு ஆதரவாக சொத்தானது என்னுடைய கணவர் பெயரில் பெயரளவில் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றாலும், அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

7. மனு சொத்தின் மீது அதிகப்படியான வில்லங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் என்னுடைய கணவர் என் பெயரில் பெயரளவிலான செட்டில்மெண்டை எழுதி வைத்துள்ளார் என்றால், சரியல்ல. செட்டில்மெண்டுக்கு பின்னர் நானும் மனுசொத்தில் எப்பொழுதும் சுவாதீன அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும், நானும் மனுசொத்தில் எவ்வித மரமும் வைத்து அனுபவிக்கவில்லை என்றாலும், சரியல்ல. நான் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் எங்களாலும், திருப்பதியாலும் சேர்ந்து தயார் செய்யப்பட்டவை என்றால், சரியல்ல. மனு நிலுவையில் இருப்பது தெரிந்து திருப்பதி நிறைவேற்று மனுவின் அடிப்படையில் சொத்து விற்பனை செய்யப்படக் கூடாது என்பதற்காக வேண்டி என் கணவர் மீது மனு சொத்து குறித்து பெயரளவிலான கிரையத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால், சரியல்ல.

8. மனு சொத்தினை ஏலத்திற்கு விட்டு நிறைவேற்று மனு தொகையினை பெறுவதற்கு 1ம் எதிர்மனுதாரருக்கு உரிமை உள்ளது என்றால், சரியல்ல. 2017 ஆம் வருடமே மனுசொத்தானது ஜப்தி செய்யப்பட்ட விபரம் தெரிந்தும் எவ்வித நடவடிக்கை எடுக்காமல் 1ம் எதிர்மனுதாரர் நிறைவேற்று மனுத் தொகையை பெறக் கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் காலம் தாழ்த்தி 2ம் எதிர்மனுதாரருடன் வஞ்சக் கூட்டு சேர்ந்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனவே என்னுடைய மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும், சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>:– இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2026.07.06 17:58:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.